## நவம்பர் - 16

**"இவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்."**

**- மாற் 14 : 8.**

நம்முடைய பிரிய இரட்சகரோடு ஆள்சம்பந்தமான தொடர்பு கொள்ளுவது நம்முடைய சிலாக்கியமல்ல, ஆனால் அன்பு, இரக்கம், சந்தோஷம், சமாதானம் ஆகிய இவைகளின் வாசனையுள்ள பரிமளத்தினால் கர்த்தருடைய "சகோதரரை" அபிஷேகம் பண்ணுவது நமக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியமாகும். நம்முடைய சுயவெறுப்புகள் சம்பந்தப்பட்டமட்டில், இது மிகவும் விலையுயர்ந்ததாயிருக்கலாம். தன்னுடைய சகோதரருக்கு எவைகளைச் செய்கிறோமோ அல்லது செய்யாமலிருக்கிறோமோ அந்த அளவிற்கு அவருக்குச் செய்கிறோம், செய்யாமலுமிருக்கிறோம் என்று அறிவித்த நமது மூத்த சகோதரனின் மதிப்பிடுதலில் மிகவும் மதிப்புமிக்கதாயும் இருக்கும். நம்முடைய பரணி (தைலப்பெட்டி) நம்முடைய இருதயமே நாம் மற்றவரகளுக்கும் விசேஷமாக நமது கர்த்தராகிய இயேசுவுக்கும் அவருடைய எல்லா சீஷர்களுக்கும் காட்டும் காட்டும் நல்லெண்ணங்களும், பாசம், அன்பு ஆகிய இவைகளின் மிகசிரேஷ்டமானதும், வாசனையுள்ளதுமான பரிமளத்தால் நம்முடைய இருதயம் நிறைந்திருக்க வேண்டும். நாம் அவர்களுடையவர்களாயிருக்கிற காரணத்தால் நமது கர்த்தராகிய இயேசுவின் மேலும், அவருடைய எல்லா சீஷர்கள் மேலும் நாம் இப்பொழுது வாசனையுள்ள அன்பின் மணத்தையும், கர்த்தரின் நாமத்திலுள்ள பக்தியின் மணத்தையும் ஊற்ற நாம் சிலாக்கியம் பெற்றிருக்கிறோம்.

**- Z '98, 78, & 00, 378 (R 2447, 2743)**

இயேசு மரியாளுடைய மனுஷீக பெலவீனங்களை அறியாமலிருந்த காரணத்தால் அவர் தனக்குச் செய்த அவருடைய நற்கிரியையை மிகவும் உயர்வாக மெச்சினார் என்று அல்ல, ஆனால் அவளைப்பற்றிய அறிவை உடையவராய் இருந்தும் அவருடைய திறமை, நோக்கம் ஆகிய இரண்டையும் கருதக்கூடிய குணத்தின் பெருந்தன்மையை உடையவராய் இருந்தார். இது அவளுக்காகத் தன்னிடமுள்ள மிகச் சிறந்ததைச் செய்யச் சித்தங்கொண்டிருந்ததாகவும், தன்னுடைய மிகச்சிறந்த திறமைக்குத்தக்கதாக செய்திருந்ததாகவும் அவர் அறிந்து மரியாள் அவ்வளவாய் மெச்சச் செய்தது. ஆகையால், ஒரு ஞாபகச் சின்னமாக இருக்க, அவர் சந்தோஷமாக அவளைப் புகழ்ந்தார். சந்தேகமில்லாமல், இந்த புகழ்ச்சி நமக்கான ஒரு படிப்பினையாகவும், ஒரு தேற்றக்கூடிய காரியமாகவும் இருக்க வேண்டுமென்றும், மற்றவர்களுடைய நற்கிரியைகளையும் அன்பின் கிரியைகளையும் உயர்வாக மதிக்க நாம் கற்றுக்கொள்ளலாமென்றும் நன்மைசெய்ய உற்சாகப்படுத்தப்படுவோமென்றும் அவர் நோக்கங் கொண்டார். நமது மிகச்சிறந்த நோக்கங்களுடனும், திறமையுடனும் அவருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களின்மேல் நமது வெள்ளைக்கல் பரணியை உடைத்து ஊற்றினோமானால் அவர் நமது கிரியையை உயர்வாக மதித்து நம்மால் செய்யக் கூடியதைச் செய்திருக்கிறோமென்று, அதை ஒரு ஞாபகச் சின்னமாக அறிவிப்பார். நம்மிடமுள்ளதில் இதைவிட அதிகமாக தேவன் கேட்கமாட்டார். குறைவாக நாம் கொடுக்க வேண்டியதுமில்லை.

**- P '33, 162.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

எசே 9:11; மத் 25:14-17; லூக் 21:1-4; ரோம 12:3-8; எபே 4:7; 6:7; 1தீமோ 6:20; 1கொரி 3:8,12-15; 16:2; 2கொரி 8:11-24; வெளி 2:23.

**கோபுர வாசிப்பு** : Z '05, 103 (R 3534).

**வினாக்கள் :** இந்த வாரத்தில் கர்த்தருக்காக நான் என்ன செய்தேன்? எவ்வாறு? ஏன்? பலாபலன் என்ன?